9614.

# அகில இலங்கைத் தமிழ்த் தின விழா, 1970



கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## மட்டுநகர் மாநகர மண்டபம்

## 13, 14, 15 ஆகஸ்ட் 1970.

★

370.344
அகில
SL|PR

கல்வித் திணைக்களம் – மட்டக்களப்பு.

Space donated by

THILLAINADARAJAH STORES
Central Road,
BATTICALOA.

Space donated by

★

**M. P. C. S. Union Ltd.**

**BATTICALOA.**

*Contact us for road haulage, of any tonnages of goods.*

QUICK AND SAFE DELIVERY GUARANTEED

DAILY SERVICE OPERATED FROM

COLOMBO TO BATTICALOA AND AMPARAI DISTRICTS

LARGE OR SMALL CONSIGNMENTS ACCEPTED.

# S. S. M. CHOLUKKAR & BROS.

**GENERAL MERCHANTS & TRANSPORT AGENTS.**

**AGENTS FOR CEYLON PETROLEUM CORPORATION.**

**No. 9, Bazaar Street, BATTICALOA.**

Phone: 255 Grams: CHOLUKKAR

*BRANCHES:*

126, BANKSHALL ST.
**COLOMBO.**
Phone 27289.

336, MAIN ST.
**KALMUNAI.**
Phone: 309.

With Compliments

from

# St. Sebastian Press

PRINTERS ★ BOOK-BINDERS ★ STATIONERS

RUBBER STAMP MAKERS.

65, Lady Manning Drive,

BATTICALOA.

Phone: 386

'' எருமை மாடுகள் பசுமாடுகள்
எருதுமாடுகள் குதிரையிவை
பெருமையாக வைத்துத் தொழிலும்
பிழைப்புந் தழைப்புமாயிருக்குமவர்
அருமையா யவை பசியறிந்தே
அருந்தீவனம் அளித்தே வளர்க்கி(ல்)
உரிமையாளரா (ய்) சுவர்க்கபதி
ஊழிகாலமும் வாழுவாரே ''

**காயல்பட்டணம் கவிஞர் ஸாம்**
**ஷிஹாபுத்தீன் வலிநாயகம்**
(அதபுமாலை மாடாடாளும் படலம்)

*பண்ணை வாழ்க்கைக்கு ஏற்ற எல்லாம்*
*ஆடு, மாடு, கோழித்தீனி, கால்ந[redacted]மருந்து,*
*உபகரணங்கள், களைக்கொல்லி, பூச்சிக்கொல்லி மற்றும்*
*கிருமிநாசினிகள், தெளிகருவிகள், தூவுகருவிகள், பசளைகள்*
மற்றும்பல கிடைக்குமிடம்:

# பாம் ஹவுஸ்

**34, கடைத்தெரு, மட்டக்களப்பு.**

தொலைபேசி; *332.*

*கிளை :*

**திருமலை வீதி, ஓட்டமாவடி.** *(வாழைச்சேனை)*

# உள்ளே

பக்கம்

1 கௌரவ கல்வி அமைச்சர் அவர்களின் ஆசி 6

2 கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி அவர்களின் நற்செய்தி 7

3 பிரதி கல்வி மா அதிபதி அவர்களின் வாழ்த்து 8

4 கல்வி அதிபதி திரு. எஸ். தணிகாசலம் அவர்களின் செய்தி 9

5 தமிழ்த்தின விழா நடுவர் குழு 10

6 கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து 11

7 தமிழ்த் தின விழா - ஜனுப் முகம்மது சமீம் 12

8 தமிழ்த் தின விழாவின் முக்கியத்துவம் பொன். சின்னத்துரை 14

9 தமிழ்த் தின விழா - நோக்கமும் பயனும் — கலாநிதி க. கைலாசபதி 15

10 நிகழ்ச்சி நிரல் 16

11 பங்குபற்றும் பாடசாலைகள் 19

12 விழா அமைப்புக் குழு 21

கௌரவ கல்வி அமைச்சர்,

# அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் அவர்களின் ஆசி.

1970ம் ஆண்டு பாடசாலைகள் தமிழ்த் தின விழா மட்டக்களப்பில் நடைபெறுவது கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். இந் நாட்டில் வாழும் முக்கிய சமூகங்களில் தமிழ் சமூகமும் ஒன்று. அச்சமூகத்தவரின் தாய் மொழியாம் தமிழ் மொழியைச் சிறப்பிக்குமுகமாக நடாத்தப்படும் பாடசாலைகளின் தமிழ்த் தின விழாவில் அகில இலங்கையிலுமிருந்து தமிழ் மாணவர்கள் பங்கு பற்றுவது இந் நாட்டின் ஒற்றுமையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. மொழியால் வேறுபட்டாலும் இந் நாட்டு மக்களனைவரும் ஒருமைப் பாடுடையவரே. இந்த ஒற்றுமையே எமக்கு மிகவும் வேண்டுவது. இவ் வொற்றுமை உணர்வோடு அனைவரும நாட்டுக்கு உழைத்தால் அவர் தம் உரிமைகளும் இயல்பாகவே கிடைக்கும் என்பது உறுதி.

தமிழ் மொழி பேசுபவர் அனைவரும் இந் நாட்டின் தேசிய விஷயங்கள் யாவற்றிலும் முழு உணர்வோடும், அபிமானத்தோடும் பங்குபற்ற வேண்டும். அதன் மூலமே மொழியையும் இனத்தையும் கடந்த மகத்தான தேசிய ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டுணர்வையும் நாம் அடையலாம். இதற்குக் கருவியாகவும் தமிழ் மொழி அமைய வேண்டும். அப்பொழுதுதான் அது தன் பூரணத்துவத்தை அடையும். இத்தகைய சூழலிலே எமது மாணவர்கள் வளர வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் சிறந்த பிரஜைகளாக விளங்குவார்கள். பழமையும் புதுமையும் கலந்த விதத்தில் இவ் விழா அமைவதாக அறிகிறேன். அது மிகப் பொருத்தமே. இவ் விழாவின் மூலம் மாணவர்கள் தமது மொழியறிவை விருத்தியடையச் செய்வதோடு, நாட்டின் தேவைகளையும் உணர்ந்து செயல்பட வேண்டுமென விரும்புகிறேன்.

இவ் விழா வெற்றிகரமாக நடந்தேற உழைக்கும் யாவருக்கும் என் நல் வாழ்த்துக்கள்.

பதியுதீன் மஹ்மூத்



கௌரவ கல்வி அமைச்சர்

**அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத்**

கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி

# திரு. பி. உடகம அவர்களின்

## நற்செய்தி.

பல்வேறு மொழித்திறன்களும் நமது பாடசாலைகளில் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும். தமிழ்ப் பாடசாலைகளிலே தமிழ்மொழித் தினங்களை நடாத்துதல், முன்னேற்றமடைந்து வரும் ஒரு சமூகத்திற்குத் தேவையான மொழித் திறன்கள் யாவையும் வளர்க்க உதவும். ஒரு மொழி, இலக்கண இலக்கிய மாகக் கற்பிக்கப்படுவது மாத்திரமின்றிக் கருத்தைத் தெரிவிக்கும் விசேட திறமைகளுடையதாகவும் கற்பிக்கப்படுதல் வேண்டும். எங்கள் நாட்டிற் போல, பல மொழிகளையுடைய சமூகத்திலே மொழித் திறன்களின் வளர்ச்சி எல்லா மக்களையும் ஒன்று சேர்க்க உதவுகின்றது. இது எங்கள் கல்வித் திட்டத்தின் இலக்காக இருத்தல் வேண்டும்.

கல்வித்திட்டத்தின் அடிப்படை முக்கியத்துவமுடைய மொழித் திறன்களின் அபிவிருத்திக்கு அகில இலங்கைத் தமிழ் மொழித்தினம் பெரிதும் உதவுமென நான் நம்புகிறேன்.

# அகில இலங்கைத் தமிழ் மொழித்தினம்

*டபிள்யூ. எம். ஏ. வர்ணசூரிய,*
*பிரதிக் கல்வி மகா அதிபதி (ஆ. க.)*

கல்வி அமைச்சின் வழிநடத்துதலின் கீழ் மட்டக்களப்பில் நடாத்தப்படும் அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவிற்கு இந்நற்செய்தியை அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இலங்கையிலுள்ள பாடசாலைகளில் மொழி கற்பித்தலை வளர்ப்பதற்கும் திடப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சினுற் கையாளப்படும் பரந்த திட்டங்களுள் அகில இலங்கைத் தமிழ் மொழித்தினமும் ஒன்ருகும். சில காலத்துக்குமுன் இத்தகைய முயற்சிகள் இரண்டாவது மொழியைக் கற்பித்தலுக்கே விசேடமாகக் கையாளப்பட்டு வந்தன. ஆனுல் இலங்கை மாணவர்களுக்கு இரண்டாவது மொழியைக் கற்பித்தலிலும் பார்க்க முதலாவது மொழியைக் கற்பித்தலே முக்கியமானது என இப்போது உணரப்படுகிறது. முதல் மொழிகள் நீண்டகாலமாகப் பெருமதிப்புப் பெற்றிருந்த மொழிகளாக இருப்பதனுல் இரண்டாவது மொழியைப் பார்க்கிலும் இப்புராதன மொழிகளைத் தற்கால தேவைகளுக்கு உபயோகிப்பதற்காக வளருஞ் சந்ததியினரைப் பயிற்றுவது ஆசிரியரின் மேலான கடமையாகும். இதற்கான காரணத்தை நாம் இலகுவில் கண்டுகொள்ளலாம். ஒரு புராதன மொழியைத் தற்காலத் தேவைகளுக்கு உபயோகப்படுத்துவது இலகுவான காரியமன்று. இது மிகுந்த கவனத்துடன் கையாளப்படுவதோடு மொழிப் பொருட் புனைவாற்றலுடன் அறிமுகப்படுத்தப்படுதலும் வேண்டும். முதியோர்களைவிட இளைஞர்களுக்கே இப்புதிய மொழியின் உபயோக வளர்ச்சிகளை அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறது. மாற்றங்கள், பொருளிலும் கருத்திலுமேயன்றி மொழியுருவத்தில் அதிகமாயிராவெனக் கருதப்படுகின்றன. தற்போது ஒழுங்கு செய்யப்படுவதுபோன்ற விழாக்கள் ஆசிரியர்களும் மாணவர்களும் நாடுகின்ற புதிய கருத்து வாய்ந்த மொழி ஆட்சிக்கு வழிவகுக்கும்.

இவ்விழாக்களை ஒழுங்கு செய்பவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கும், பாடசாலைகளின் மனமார்ந்த ஒத்துழைப்புக்கும் எனது நன்றியைத் தெரியப்படுத்துகின்றேன்.

# அகில இலங்கைத் தமிழ்த் தின விழா

**எஸ். தணிகாசலம்,**

கல்வி அதிபதி, கல்வி அமைச்சு, கொழும்பு.

நமது கல்வி நிலையங்களிலே பயில வரும் மாணவர் ஒவ்வொரு வரிடத்திலும் ஒவ்வொரு வகையிலே ஒவ்வொரு தனித் திறமை யாவது இருக்கும். அந்தந்தத் திறமை மங்கி மறைந்து போகாமல் வளர்ந்து பயன்தருவதற்குப் பெற்றோர், ஆசிரியர் ஆகிய இரு பாலாருமன்றி, கல்வி அமைச்சும் பேரூக்கமளித்து வழிப்படுத்தி வருகின்றது. இதன் பெறுபேற்றை இன்று நிகழுந் தமிழ்த் தின விழாவிலே நேர்முகமாக நாம் அறிந்து களிக்கலாம்,

தமிழ் மொழியும், அம்மொழி பேசும் மக்கள் அடையத்தக்க பெரும்பயன்களும் அபிவிருத்தியடைய வேண்டுமானால், அத்தமிழ் மொழியிலே தனித்திறமை பெறுதற்குத் தகுதியுடையராய் விளங் கும் மாணவர்களது முதன்மையூக்கத்தைத் தூண்டி, அவர்களது திறமையை வெளிப்படுத்துதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

இந்நற் கடமையை நாம் பரிபூரணமாக நிறைவேற்றுதற்கு, நமது ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் நம்முடன் சேர்ந்து, ஒத்துழைப்பை நல்குவார்களாக.

# அகில இலங்கைத் தமிழ்த் தின விழா

### நடுவர் குழு:

1 ஜனுப். எம். எம். உவைஸ் அவர்கள், தமிழ்த்துறைத் தலைவர் வித்தியோதய பல்கலைக் கழகம்.

2 திரு. அ. வி. மயில்வாகனம், உதவி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

3 திரு. அ. அருளையா, கல்வி ஆலோசகர், கல்வி அமைச்சு

4 திரு. தி. மாணிக்கவாசகர், கல்வி ஆலோசகர், கல்வி அமைச்சு

5 ஜனுப் எம். ஐ. எம். செரீப், வட்டார கல்வி அதிகாரி, கல்வி அமைச்சு

6 திரு. எஸ். சி. கருணைநந்தன், அதிபர்—ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, மட்டக்களப்பு

7 ஜனுப் எம். எம். ஏ. ஹசன், விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய கல்லூரி, பெரதெனியா

8 திருவாட்டி கங்கேஸ்வரி கந்தையா, விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, மட்ட க்களப்பு

9 திரு. என் டி. பீரிஸ், ஆசிரியர், பாட வழிகாட்டித்துறை, கல்வி அமைச்சு

10 ஜனுப் ஏ. எம். ஷாகுல் ஹமீத், ஆசிரியர், பாட வழிகாட்டித்துறை, கல்வி அமைச்சு

11 ஜனுப் ஜே. எம். காசிம், பொது விஞ்ஞானச் சிறப்புப் பயிற்சி ஆசிரியர் பாட வழிகாட்டித்துறை, கல்வி அமைச்சு

12 சைவப்புலவர், பண்டிதர் திரு. இ. செல்லத்துரை, ஆசிரியர், பாட வழிகாட்டித்துறை, கல்வி அமைச்சு

13 ஜனுப் எம். உவை. ஏ. அப்துல் காதர், ஆசிரியர், பாடவழிகாட்டித்துறை, கல்வி அமைச்சு

14 திரு. க. கந்தசாமி, ஆசிரியர், பாடவழிகாட்டித்துறை, கல்வி அமைச்சு

கிழக்குப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்

## திரு. பீ. ஏ. ஜீ. மெண்டிஸ் அவர்களின்

# வாழ்த்து.

மொழி ஒரு இனத்தின் உயிர் மட்டுமல்ல, அது அந்த இனத்தின் வளர்ச்சியைக் கணிக்கும் அளவுகோலுமாகும். மொழி ஆராய்ச்சி வல்லுநர்கள் இந்த உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

நமது நாடு நீண்டகாலம் அந்நிய ஆட்சிக்குட்பட்டிருந்த காரணத்தால் மொழியின் வளர்ச்சி தேங்கியிருந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், நம் மக்கள் ஒவ்வொரு துறையிலும் முன்னேறுவதற்கான திட்டங்களை ஆக்கி அதன்வழி செயல்பட வாய்ப்பு இருந்தது, நமது தேவைக்கேற்ப கல்வித் திட்டங்களில் வேண்டிய மாற்றங்களையும் செய்யமுடிந்தது. அதன்படி நமது பாடசாலைகளில் இன்று மொழி பெரும் முக்கியத்துவம் அடைந்துள்ளது. ரசாயனம், பௌதிகம், விஞ்ஞானம், கணிதம் முதலிய பாடங்களைக்கூடத் தாய் மொழியில் கற்கும் வாய்ப்பு இன்று நமது மாணவ மாணவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

பாடப்புத்தகங்களைக் கற்பதனால் மட்டும், மொழி வளர்ச்சியடையவோ அல்லது மாணவர்கள் மொழியின் மகத்துவத்தை உணர்ந்து கொள்ளவோ முடியாது வேறு விசேட ஒழுங்குகளும் செய்யப்பட வேண்டும். இதை அடிப்படையாகக் கொண்டே, தமிழ்த் தின விழா சிங்களத் தின விழா, ஆங்கிலத் தின விழா முதலியவற்றை விரிந்த அடிப்படையில் கொண்டாடும் திட்டத்தைக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டது.

கடந்த சில வருடங்களாக ஆண்டுதோறும், நாம் கொண்டாடிவரும் தமிழ்த் தின விழா குறிப்பிடத்தக்க பலனைத்தந்துள்ளது. ஆசிரியர்களும், மாணவர்களும் மட்டுமல்லாது பொது மக்களும்கூட மொழியின் மகத்துவத்தை உணர்ந்து கொண்டாடும் ஒரு விழாவாக இது அமைந்துள்ளது,

இவ்விழாவில் இடம்பெறும் பல்வேறு போட்டிகள் சிறுவயதிலிருந்தே மாணவர்கள் தமது மொழியை நேசிக்கவும், மொழியின்மேல் பற்றுக் கொள்ளவும் ஊக்குவதாய் அமைந்துள்ளன அகில இலங்கையிலும் உள்ள ஆசிரியர்களும், மாணவர்களும் மிகுந்த உற்சாகத்துடன் இவ்விழாவில் பங்குபற்றுவது ஒன்றே, இவ்விழாவின் வெற்றிக்கு உரைகல்லாகும்.

அகில இலங்கை ரீதியிலான இத்தமிழ்த் தின விழா இவ்வாண்டு எனது பரிபாலனத்தின் கீழுள்ள கிழக்குப்பிராந்தியத்தில் நடைபெறுவதையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன். வெளி இடங்களிலிருந்து வரும் பிரதிநிதிகளுக்கு என் நல்வாழ்த்துக்கள், இவ்விழா இனிதே நடந்தேற எனது ஆசிகள்.

பீ. ஏ. ஜீ. மெண்டிஸ்,
கிழக்குப் பிராந்தியக் கல்விப்பணிப்பாளர்.

# தமிழ்த் தின விழா.

ஒரு சமூகத்தின் பண்டைய வரலாற்றையும், நாகரிகத்தையும், மரபையும், அச்சமூகத்து மக்கள் வாழையடி வாழையாக வாழ்ந்து வந்த வாழ்க்கையையும், அவர்களது ஆசாபாசங்களையும் மன எழுச்சிகளையும், உணர்வுகளையும் எடுத்துக்காட்டவல்ல ஒரே சாதனம் மொழி. மனிதனுடைய சமூக, பொருளாதார வாழ்க்கை அத்தனை ஊடாகவும் மொழி ஊடுருவச் சென்றது. மொழியைக் கண்டுபிடித்த பிறகுதான் மனிதனின் நாகரிகமே தொடங்கியது. மனிதனின் அறிவு வளர, வளர, அவனது மொழியும் விருத்தியடைகிறது. இந்தப் பின்னணியிலிருந்து எமது சமூகத்தை நோக்கினால், மொழியின் முக்கியத்துவத்தை நாம் அறியலாம். மனிதனது அறிவிலிருந்து பிறந்ததுதான் மொழி. காலம், இடம், சூழ்நிலைக்கேற்ப அந்த மொழி வளர்ந்தது. அவனுடைய அறிவு வளர்ச்சியடையும்பொழுது, அவனது மொழியும் வளம்பெற்றது. அறிவு வளர்ச்சிக்கேற்ப மொழியும் வளர்ந்தது. அறிவு வளர்ச்சி ஏற்படாத விடத்தில் மொழியின் வளர்ச்சியும் ஸ்தம்பித்தது. ஆகவே அறிவுதான் முக்கியம். மொழி ஒரு சாதனம். இந்த அறிவு வளர்ச்சியினால் ஏற்படும் சமூக மாற்றங்களுக்கேற்ப மொழி வளைந்து கொடுக்க வேண்டும். அப்படி வளைந்து கொடுக்காத பட்சத்தில் சமஸ்கிருத, கிரேக்க, உரோம மொழிகளைப்போல அது காலப்போக்கில் மக்களின் மனதிலிருந்து மறைந்துவிடும். அதற்குப்பதிலாக அம்மக்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு வேகமும், ஆற்றலுமுள்ள ஒரு புதிய மொழி தோன்றும். ஆகவே மொழி, அறிவு, என்பதெல்லாம், 'மனிதன்' என்ற ஆணிவேரிலிருந்து எழும்பிய கிளைகளே. மொழி, அறிவு, நாகரிகம், மரபு இவைகளில்லாமல் மனிதன் வாழலாம். ஆனால் உணவு இல்லாமல் அவனால் வாழ முடியாது. ஆகவே மனிதன் வாழ்வதற்கு உணவு அவசியம். அவனுடைய பொருளாதார நிலை முதலில் வளம்பெறவேண்டும். அவன் வாழ்ந்தால்தான் மொழி, மரபு, இவையெல்லாம் வாழும். எனவே, மனிதன் அவன் கூடி வாழும்போது ஏற்படும் சமூகம்தான் எல்லாவற்றிற்கும் அடிப்படையானது.

சமூகம் வாழ்ந்தால் தான் மொழி வாழும், சமூகத்தை மறந்துவிட்டு மொழி வாழவேண்டும் என்று கூறுவது மனிதனின் ஆற்றலை, அவனது சக்தியை அவமதிப்பதாகும். ஆகவே சமூகம் வாழ்வதற்கு முதலில் வழிசெய்ய வேண்டும். அதே சமூகம் தனது அரசியல், பொருளாதார, சமூக வாழ்க்கையில் மாற்றங்களை யேற்படுத்தும்போது மொழியையும் தன் வாழ்க்கைக்

கேற்ப வளம்படுத்த முயல்கிறது. புதிய சமுதாயம் உருவாகும்போது புதிய கருத்துக்கள், புதிய வார்த்தைகள், புதிய மரபுகள், புதிய இலக்கணங்கள், புதிய இலக்கியங்கள் தோன்றுகின்றன. அது புதிய பாதையில் ஏறுநடை போடும்பொழுது மொழியும் ஒட்டிச் செல்லவேண்டும்.

இவ்விருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் உலகம் பலவித மாற்றங்களைக் கண்டிருக்கிறது. அடிமைத்தளையிலிருந்து விடுபட்ட சமூகங்கள், புதிய கருத்துக்களுக்கேற்ப அரசியல், பொருளாதார சமூக வாழ்க்கையில் புதிய மாற்றங்களைக் கொண்டுவந்து ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கி வருவதை நாம் காண்கிறோம். இப்புதிய சமுதாயத்தை உருவாக்கி அதை நிலைநாட்டக் கூடியவர்கள் இன்றைய மாணவர்களும், இளைஞர்களுமே. இளைஞர் சமுதாயம் விளிப்பாயிருக்கவேண்டும். தனது ஆற்றலையும், சக்தியையும், களியாட்டங்களிலும், கேளிக்கைகளிலும், காம வாழ்க்கையிலும் விரயமாக்காமல், இப்புதிய சமுதாயம் வாழ்வதற்காகப் பாடுபடவேண்டும். இப்புதிய சமுதாயத்தில் புதிய கருத்துக்கள் தோன்றவேண்டும், புதிய மரபுகள் தோன்ற வேண்டும், சுருங்கச் சொன்னால் புதிய வாழ்க்கையே ஏற்படவேண்டும்.

இலங்கை மக்கள் அரசியல் வாழ்க்கையில் புதிய அடி எடுத்து வைத்த இந்தக் கால கட்டத்தில் எமது தாய்மொழியாம் தமிழ் மொழியைச் சிறப்பிக்கு முகமாகவும், தமிழ் மொழியை நன்றாகக் கற்று, அம்மொழியிலுள்ள வளைவு சுழிவுகளை அறிந்து, உணர்ந்து, தம் வாழ்க்கைக்கேற்ப மொழியை வளம்படுத்தவும், இன்று மாணவர்கள் தமிழ்த் தின விழாவைக் கொண்டாடுவது பொருத்தமாகும்.

அகில இலங்கைப் பாடசாலைகளின் தமிழ்த் தின விழாவாகிய இவ் விழாவுக்கு இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமிருந்து, யாழ்ப்பாணம் முதல் மாத்தறை ஈறாகவுள்ள தமிழ்பேசும் மாணவர்கள் மத்தியில் நடந்த போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள், இந்த விழாவில் பங்கெடுக்கிறார்கள். பாடசாலைகளில் ஆரம்பித்து, வட்டாரங்கள், மாவட்டங்களில் போட்டியிட்ட அத்தனை மாணவர்களுக்கும் பிரதிநிதிகளாக, பொதுவாகச் சொன்னால் தமிழ் மொழி மூலம் கல்வி பயிலும் அத்தனை மாணவர்களது பிரதிநிதிகளாக இவ் விழாவில் பங்குபற்றுகிறார்கள். மொழியின்மூலம் ஒற்றுமையைக்காணும் இம் மாணவர்கள் இவ்விழாவின் மூலம் நாட்டுப்பற்றும், சமூகப்பற்றும் பெறுவார்கள் என எதிர்பார்க்கிறேன்,

முகம்மது சமீம்.

# தமிழ்த் தின விழாவின் முக்கியத்துவம்

இன்றைய உலகில் முன்னேற்றமடைந்த பல மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று. தரத்தில் உயர்ந்து விசேட சிறப்பு அம்சங்களைக் கொண்டது தமிழ் மொழி; பொருளிலும், நயத்திலும், மட்டுமன்றி இனிமையிலும், தொன்மையிலும், செம்மையிலும் சிறப்புற்றிருப்பது தமிழ்மொழி; யாண்டுகள் பலவாகினும் அழியாத சீரிளமைபூண்டது கன்னித் தமிழ் மொழி; இத்தகைய தெய்வத் தமிழ் மொழியை பெருமை தரும் தேசீயச் செல்வமாகக் கொண்டுள்ளது இலங்கை இச் செல்வத்தைப் பாதுகாப்பதும், புதுக்குவதும், முன்னேற்றப் பாதையில் உயிர் நாடியாக்குவதும் மொழிப் பற்றுடையாரது மிகப்பெருங் கடனாகும்.

வருங்கால நவயுகச் சிற்பிகளாகிய மாணவச் சிறார்களின் உள்ளங்களிலே தாய் மொழிப் பற்றையும், தமிழ்மொழி பற்றிய தெளிவான கருத்தையும், மொழியறிவையும் ஊட்டித் துணை புரிவது இத்தமிழ் மொழித் திறன் போட்டிகளடங்கிய தமிழ்த தினமாகும் நம் சிறுவர்கள் மத்தியிலே தமிழ் மொழி பற்றிய தெளிவான அறிவை வளர்த்து மொழிப் பற்றையும் ஏற் படுத்துவது இத் தினப் போட்டிகள். மொழித்திறனும், உரை நடை ஆற் றலும், கட்டுரை வன்மையும், வாக்கு வன்மையும், சுவைத்தற் தன்மையும், நாடக நயமும் செவ்விதாக வளர்க்கப் படுகின்றன. இதனால் கல்வித் துறையில் ஒரு முன்னேற்ற மலர்ச்சியைக் காணலாமென்பது துணிபு.

குழந்தைகட்குத் தாய்ப்பால் எத்தகையதோ ஒருவருக்குத் தாய் மொழியும் அத்தகையதாகும். ஒருவன் தனது தாய்மொழியூடாக அனுப விக்கவல்ல இலக்கிய இரசனை பிறமொழிகளால் கிடைத்தல் அரிது. தாய் மொழியே ஒரு இனத்தின் கலைக்கும், கலாச்சாரத்திற்கும் அடித்தள மாக அமைகிறது. எனவே, தமக்கெனச் சொந்தமானதொரு சூழலையும், சுற்றத்தையும், பண்பாட்டினையும், வளர்க்க வேண்டுமானால் தாய் மொழி தழுவப்படவேண்டும். கல்வி புத்தகப் படிப்போடு முற்றுப் பெறுது வாழ்க் கையின் ஊற்றாக உதவத் தாய் மொழிக் கல்வி அவசியம் என வற்புறுத்தப் படுவதை நாம் அறிந்துளோம்.

தமிழ் மொழிக்கும், கல்விக்கும் தொண்டு செய்த ஈழத்துத் தமிழ்ப் பெரியார்களில் வடக்கில் ஆறுமுக நாவலரும், கிழக்கில் சுவாமி விபுலா னந்தரும் முக்கியமானவர்கள். எனவே, சென்ற ஆண்டு யாழ்ப்பாணத்திலும், இவ்வாண்டு மீன்பாடும் தேனகமாகிய மட்டக்களப்பிலும் தமிழ் மொழித் திறன் போட்டிகள் இடம் பெறுவது சாலச்சிறந்தது.

தமிழ்த் தின விழா இனிதே நிறைவேறவும், இம்மலர் சிறப்புடன் வெளிவரவும் நிதி, விளம்பரம், கேடயங்கள், மற்றும் பரிசிற் பொருட்கள் முதலியவற்றையும் வாரி வழங்கிய பெருமக்களுக்கு எம்மனைவரதும் அன்பு கலந்த நன்றி என்றும் உரியது இம்மலரது சிறப்பனைத்துக்கும் காரண மான அர்ச். செபஸ்தியார் அச்சகத்துக்கும் எனது நன்றி.

தமிழ் மொழித் தினம் இனிது நிகழ்க !
வாழ்க தமிழ் மொழி; ஓங்குக
தமிழ் மொழித் தொண்டு.

பொன். சின்னத்துரை,
மலர் ஆசிரியர்.

# தமிழ்த் தின விழா - நோக்கமும் பயனும்

***கலாநிதி க. கைலாசபதி***, M. A., Ph. D.
(இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்)

அகில இலங்கைப் பாடசாலைகள் தமிழ்த் தின விழா இந்நாட்டுத் தமிழ் மாணவருக்கு முக்கியமானது ஒன்று என்பதில் ஐயமில்லை. ஒவ்வொருவரும் தத்தம் தாய்மொழியைப் போற்றிப் பேண விழைவது இயல்பே. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக எமது நாட்டிலே மொழிபற்றிய உணர்வும் விளக்கமும் பல சந்தர்ப்பங்களிலே நெறிதவறிப் போயின என்றே கூறுதல் வேண்டும். மனித வாழ்வில் மொழிக்கு ஓர் இடமுண்டு என்பதை எவரும் மறுக்கவியலாது; ஆனால் அதற்குரிய இடத்தை அறிந்து அதனை அளிப்பதிலேயே பொது வாழ்க்கை சிறப்படைகிறது.

மொழி என்றதும் எம்மவரிற் பலருக்கு இலக்கண இலக்கியங்களின் எண்ணமே தோன்றுகிறது. ஒரு காலத்தில் மொழி என்றால் அது இலக்கண இலக்கியங்களின் சாதனமாகவே கருதப்பட்டது. ஆனால் இன்றோ, மனிதனது ஆய்வுத்துறைகள் பெரும்பாலன மொழியுடன் நெருங்கிய தொடர்புடையனவாய் உள்ளன. கடந்த காலங்களில் அந்நிய மொழியாகிய ஆங்கிலம் போதனாமொழியாகவும், குறிப்பாக உயர்கல்விக்குரிய மொழியாகவும் விளங்கியபோது, எமது தாய்மொழியாம் தமிழ், வீட்டுமொழியாகவும், இலக்கிய ஆக்க மொழியாகவுமே பெரும்பாலும் பயன்பட்டது அதன் காரணமாக உணர்ச்சிக்கு உணவாயமையும் கவிதை, நாடகம் முதலிய இலக்கியங்களைக் கொண்ட கலாசார மொழியாக தமிழ் தங்கி நின்றுவிட்டது. பழமை, பின்னோக்கு, மரபு நாட்டம், தேக்கம் ஆகியவற்றின் நிலைக்களனாகவும் அது அமைந்துவிட்டது.

இன்று தாய்மொழி மூலம் கலைகளும் அறிவியல்களும் ஓரளவு பயிலப்படுகின்றனவாயினும், பழைய ''இலக்கிய''ப் பிடியிலிருந்து அது விடுதலை பெற்றுவிட்டதெனக் கூறவியலாது. ஆய்வறிவுச் சாதனமாகவன்றித் தன்னளவில் குறைவுடையதொன்றாகவே அது பலராற் கருதப்படுகின்றது. தமிழ் மொழியும், தமிழ் பேசும் மக்களும் பல வழிகளில் இன்னும் பின்தங்கி நிற்பதற்குக் காரணம் இதுவேயாகும். மொழியை ஏவல்கொண்டு வாழ்க்கையை வளப்படுத்துவதற்குப் பதிலாக அது பலரை ஆட்டிப்படைத்து விடுகிறது. கருவி கர்த்தாவாக மாறிவிடுகிறது.

இந்நிலைமை முற்றாக மாறவேண்டும். எமது சமுதாய வாழ்விலும் அரசியல் வாழ்விலும் மொழிக்கு *உரிய* இடத்தைத் தெளிவாக வரையறை செய்துகொள்ள வேண்டும். நாட்டு முன்னேற்றத்துக்கும் சமுதாயங்களுக்குள் இருக்கவேண்டிய ஒற்றுமைக்கும் தடையாக மொழியுணர்வு அமையக்கூடாது. இதுவே கடந்த கால வரலாற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய முக்கியமான பாடமாகும்.

மொழியை ஒரு சமுதாயத்தின் உயிர் எனக் கொண்டாலும், செம்மையான பொருளியல் வாழ்க்கையே அச்சமுதாயத்தின் உடலாகும். ''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்'' என்பது நல்லதோர் வாக்கு; அதனை இங்குப் பொருத்தம் நோக்கி நினைந்துகொள்ளல் நலம். ஏற்றத் தாழ்வுகளற்ற நிறைவான சமுதாய வாழ்க்கை ஏற்படும்போதே, மொழியும் தன்னிறைவெய்தும். ஆகவே மாணவர்கள் மொழிக்கும் மேலாகச் சமுதாயத்தையும் நாட்டையும் நேசிக்கப் பழகுதல் வேண்டும். வேண்டுதல் வேண்டாமையற்ற சமுதாயத்திலேதான் சகலவிதமான மனித ஆக்கங்களுக்கு மொழியும் ஒரு கருவியாக அமையும். அதனை மறவாதிருத்தல் தகும்.

தமிழ் மூலம் நாம் விரிவடைய வேண்டுமேயன்றிக் குறுகிய வரம்புக்குள் எம்மை வரித்துக்கொள்ளலாகாது. நன்றும் தீதும் ஒருமொழியில் இயல்பாக இல்லை. அதனைப் பயன்படுத்தும் மக்களிடத்திலிருந்தே அவை தோன்றுகின்றன. தமிழ்த் தின விழாவின்போது இவ்வுண்மையை நினைவுகூருவோமாக.

## — நிகழ்ச்சி நிரல் —

13-8-70 *வியாழக்கிழமை*

மு. ப. 8-45 பங்குபெறும் மாணவரும் ஆசிரியரும் நகரமண்டபத்தில் குழுமுதல்.

வரவேற்புரை:- **திரு. பீ. ஏ. ஜி. மெண்டிஸ்**
கிழக்குப்பிராந்திய கல்விப் பணிப்பாளர்

அறிமுக உரை:- **ஜனாப் எம். சமீம்,**
பிரதம கல்வி அதிகாரி, மட்டக்களப்பு

(கூட்ட முடிவில் போட்டிகளில் பங்குபெறும் மாணவர்களும் அவர்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்களும் உரிய மண்டபங்களுக்குச் செல்லவேண்டும்.)

## போட்டிகள்

**ஆவணி 13, 1970 *முற்பகல்***

| நேரம் | போட்டிகள் | வகுப்பு | மண்டபம் |
|---|---|---|---|
| மு.ப. 10.00-10 05 | பிரதிபண்ணல் | 3—4 | அர்ச். மிக்கேல் கல்லூரி மண்டபம் 1. |
| ,, 10.00-10.15 | சொல்வதெழுதல் | 7 | அர்ச். மிக்கேல் கல்லூரி மண்டபம் 2. |
| ,, 10 30-10.45 | சொல்வதெழுதல் | 5—6 | அர்ச். மிக்கேல் கல்லூரி மண்டபம் 1 |
| ,, 10.45-11 45 | கட்டுரை | 7 | அர்ச் மிக்கேல் கல்லூரி மண்டபம் 2. |
| ,, 10 15-12 00 | உரத்துவாசித்தல் | 3 – 4 | அர்ச். சிசிலியா பாடசாலை |
| ,, 10.00-12.00 | நாடகம் | | நகர மண்டபம் |

நாடகத்தில் பங்கெடுக்கும் வட்டாரங்கள்: மாத்தறை, கொழும்பு தெற்கு, களுத்துறை, கம்பஹா

**ஆவணி 13, 1970 *பிற்பகல்***

| நேரம் | போட்டிகள் | வகுப்பு | மண்டபம் |
|---|---|---|---|
| பி. ப. 2.00-4.30 | உரத்து வாசித்தல் | 5 – 6 | அர்ச் சிசிலியா பாடசாலை மண்டபம் 1 |
| ,, 2 00-4 30 | பா ஓதல் | 7 | அர்ச். சிசிலியா பாடசாலை மண்டபம் 2 |
| ,, 2.00-5 30 | நாடகம் | — | நகர மண்டபம் |

நாடகத்தில் பங்கெடுக்கும் வட்டாரங்கள்: அனுராதபுரம், வவுனியா, திருகோணமலை, காலி, மாத்தளை, குருநாகல்.

***ஆவணி 14, 1970 முற்பகல்***

| நேரம் | போட்டிகள் | வகுப்பு | மண்டபம் |
|---|---|---|---|
| மு. ப. 8.30–12.00 | பா ஓதல் | 3 - 4 | அர்ச். சிசிலியா பாடசாலை மண்டபம் 1 |
| ,, 8.30–12.00 | பேச்சு | 5—6 | அர்ச். சிசிலியா பாடசாலை மண்டபம் 2 |
| ,, 9.00–12.00 | நாடகம் | — | நகர மண்டபம் |

நாடகத்தில் பங்கெடுக்கும் வட்டாரங்கள்: கேகாலை, கல்முனை, இரத்தினபுரி, பொல்லநறுவை, சிலாபம்.

***ஆவணி 14, 1970 பிற்பகல்***

| நேரம் | போட்டிகள் | வகுப்பு | மண்டபம் |
|---|---|---|---|
| பி. ப. 2.00–5.00 | பா ஓதல் | 5—6 | அர்ச். சிசிலியா பாடசாலை மண்டபம் 1 |
| ,, 2.00–5.00 | பேச்சு | 7 | அர்ச். சிசிலியா பாடசாலை மண்டபம் 2 |
| ,, 2.00–5.00 | நாடகம் | | நகர மண்டபம் |

நாடகத்தில் பங்கெடுக்கும் வட்டாரங்கள்:- மட்டக்களப்பு, பண்டாரவளை யாழ்ப்பாணம், மன்னார், நுவரெலியா.

***ஆவணி 15, 1970 முற்பகல் இறுதிப் போட்டி***

| நேரம் | போட்டிகள் | வகுப்பு | மண்டபம் |
|---|---|---|---|
| மு.ப. 9.00–12.00 | பா ஓதல் | 3—4, 5—6, 7 | அர்ச். சிசிலியா பாடசாலை மண்டபம் 1 |
| ,, 9.00–10.30 | பேச்சு | 5—6, 7 | அர்ச். சிசிலியா பாடசாலை மண்டபம் 2 |
| ,, 10-30–12-00 | உரத்து வாசித்தல் | 3—4, 5—6 | அர்ச். சிசிலியா பாடசாலை மண்டபம் 2 |
| ,, 9-00–12-00 | நாடகம் | | நகர மண்டபம் |

போட்டிகள் முடிவு.

# விழா நிறைவரங்கு

*15–8–70 பி. ப. 5 மணி*

1. தமிழ் வாழ்த்து — ***சங்கீத பூஷணம் என் இராஜு அவர்கள்***
2. தலைமை உரை — ***திரு. பீ. ஏ. ஜி. மெண்டிஸ்,***
கிழக்குப் பிராந்தியக் கல்விப்பணிப்பாளர்.
3. வரவேற்புரை — ***ஜனுப். எம். சமீம்,***
(பிரதம கல்வி அதிகாரி)
4. நினைவு மலர் வெளியீடு — ***மலர் ஆசிரியர்***
5. சிறப்புரை — ***திரு. எஸ். தணிகாசலம்,***
(வித்தியாதிபதி, மா அதிபதிக்காக)
6. பிரதம விருந்தினர் பேருரை —
***கலாநிதி க. கைலாசபதி*** M. A., Ph. D,
விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்
7. பரிசு வழங்குதல்—***திருமதி பீ. ஏ. ஜி. மெண்டிஸ்***
8. போட்டியில் தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள்

(i) பா ஓதல் — 3ம், 4ம் வகுப்புகளுக்கான போட்டியில் முதல் இடம் பெறும் நிகழ்ச்சி

பா ஓதல் — 5ம், 6ம் வகுப்புகளுக்கான போட்டியில் இடம் பெறும் முதல் நிகழ்ச்சி.

பா ஓதல் — 7ம் வகுப்புக்கான போட்டியில் முதல் இடம் பெறும் நிகழ்ச்சி.

(ii) சொற்பொழிவு —5ம், 6ம் வகுப்புக்கான போட்டியில் முதல் இடம் பெறும் நிகழ்ச்சி.

சொற்பொழிவு — 7ம் வகுப்புக்கான போட்டியில் முதல் இடம் பெறும் நிகழ்ச்சி.

(iii) நாடகம் — (2ம் இடம் பெறுவது)
நாடகம் — (1ம் இடம் பெறுவது)

9. நடனம்
10. நன்றியுரை — ***திரு. கு. சோமசுந்தரம்,***
வட்டாரக்கல்வி அதிகாரி
11. நிறைவுரை — ***திரு. ஏ. அருளையா,*** கல்வி ஆலோசகர்,
கல்வி அமைச்சு.
12. தேசிய கீதம்.

# பங்குபற்றும் பாடசாலைகள்.

## கம்பகா

சென் மேரிஸ் அ. த. க. பா, நீர்கொழும்பு
உடுகொட மு. வி றக்கவில்ல
வல்லவீதிய த. வி. நீர்கொழும்பு
வெலிகேன றோ க த.க.பா கொச்சிக்கடை
ககடோவிட்ட மு, மகளிர் வி, றக்கவில்ல
சாமரியா த, க, பாடசாலை நீர்கொழும்பு
அலிகார் ம. வி. கல்எலிய
குணுப்பிட்டிய த க பா. வத்தளை
சென் மேரியாள் த க பா நீர்கொழும்பு
தோப்பு றோ க. த. க பா. கொச்சிக்கடை
செயின்ட் ஆன் க வி. வத்தளை

## கொழும்பு தெற்கு

டி. எஸ். சேனநாயக்க க வி. கொழும்பு 7
றோ க. த. பாடசாலை கொம்பனித்தெரு
அர்ச். அந்தோனியார் ம வி கொழும்பு 3
கதீட்ரல் பாலிகா வித்தி. முகத்துவாரம் கொழும்பு
தெமட்டகொடை அ த வி. கொழும்பு 9
சாந்த கிளேயர்ஸ் பெ.ம வி. வெள்ளவத்.
கணபதி வித்தியாலயம் கொழும்பு 12
சென். ஆன்ஸ் றோ.க.த.பெ.பா. கொழும்பு 13
பம்பலப்பிட்டி றோ.க.த.பா. கொழும்பு 4

## களுத்துறை

அட்குலுகமை மு.பெ.வி. பண்டாரகமை
ஹொரேதுடுவை மு. வித். மொரட்டுவ
அல்பஹ்ரியா க. வி. பாணந்துறை
புனித யோன் வித்தியாலயம் களுத்துறை
மருதானை மு. பெ. வி. பேருவலை
அல்ஹம்ரா க. வி. தர்காநகர்
பிம்புர தமிழ் வித்தியாலயம், பிம்புர
களுத்துறை மு. க. வி. களுத்துறை

## குருநாகல்

அறக்கியால மு. வி.
குளியாப்பிட்டி ம. வி.
ஹொரம்பாவ மின்ஹாஜ் மு. வி.
ஹிஸ்புல்லா ம. வி.
தோரகொட்டுவ மு. வித்தியாலயம்
கல்கமுவ முஸ்லீம் வித்தியாலயம்
சியம்பளாகஸ்கொட்டுவ மு. வி.
தெலும்புகொல்ல மு. வி.
முவங்கந்த த. வி. கவுடுப்பொலல்ல

## மாத்தளை

பீ எம். எஸ். மகளிர் ம. வி. மாத்தளை
கலேவெல மு. ம. வி. மொரட்டுவை
இறத்தோட்டை த.வி. இறத்தோட்டை
பாக்கிய வித்தியாலயம் மாத்தளை
நிக்கக்கொல்ல மு. வி. யட்டவத்தை
கவுடுப்பெலெல்ல த.வி கவுடுப்பெலெல்ல

## கேகாலை

அர்ச். மரியாள் த. வி. எட்டியாந்தோ
நாங்கல்ல மு. வி வரகபொல
கிருங்கதெனிய மு. வி. மாவனல்ல
திப்பிட்டிய மு. வி. அரநாயக்கா
சாந்தமரியாள் த. வி. எட்டியாந்தோ.
ஸாஹிரா கனிஷ்ட வி மாவனல்ல
தும்புளுவாவ மு. வி. ஹெம்மாத்தகம

## அனுராதபுரம்

அனுராதபுரம் க. மகளிர் வித்தியாலயம்
விவேகானந்த த. ம. வி. அனுராதபுரம்
விவேகானந்த த. ம. வி. அனுராதபுரம்
பமுணுகம மு. வி. கெக்கிருவ
இக்கிரிக்கொல்லாவ மு,வி. அனுராதபுரம்
பப்ரிஷ்ட் மிஷன் த வி. எட்டியாந்தோ.

## பொலன்நறுவ

அல்கிலால் மு. வி. தம்பானை
மாணிக்கம்பிட்டி க. வி, கதுறுவெல
மன்னம்பிட்டி த. வி. மன்னம்பிட்டி
கறுப்பனை த, வி, மன்னம்பிட்டி.

### யாழ்ப்பாணம்

இளவாலை கன்னியர்மடம் இளவாலை
மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை
சென் திரேசா, அச்சுவேலி
வல்வை சிவகுரு வித்தியாலயம், வல்வெட்டித்துறை
அருணோதயக் கல்லூரி, அளவெட்டி
பொலிகண்டி சைவ வித்தியாலயம், வல்வெட்டித்துறை
இராமநாதன் கல்லூரி
நல்லூர் சாதனா பாடசாலை யாழ்ப்பாணம்

### மன்னார்

பள்ளிமுனை றோ. க. த. க. பா. மன்னார்
பெரிய பண்டிவிரிச்சான் அ த க. பா. மடுக்கோயில்
நல்லாயன் றோ. க. பெ. பா. மன்னார்
பறப்பாங்கண்டல் றோ. க. பா. உயிலங்குளம
பேசாலை றோ. க. பெ. பா. பேசாலை
எருக்கலம்பிட்டி மகளிர் வி. முல்லைத்தீவு
விடத்தல்தீவு றோ. க. த க. பா. விடத்தல்தீவு
முருங்கன் மகா வித்தியாலயம் முருங்கன்

### மாத்தறை

மின்ஹாக் க. வி. திகவல்லை
கொறகொட மு. வி. தெவிச்சலிவ
தர்ம கபீர் ம. வி. அம்பாந்தோட்டை
யக்கஸ்முல்ல மு. வி. வீரகெடிய
வெலிப்பிட்டிய மு. வி. வெலிகம
தாறுல் உலூம் ம. வி. மாத்தறை

### வவுனியா

பாவற்குளம் ம. வி. பாவற்குளம்
தனியூற்று சீ. சீ. பா. முள்ளியவளை
சாளம்பைக்குளம் ம. வி. சாளம்பைக்குளம்
வவுனியா ம. வி. வவுனியா
சமளங்குளம் அ. த. பா. வவுனியா
முல்லைத்தீவு றோ. க. பா. முல்லைத்தீவு
குமிளமுனை அ. த. க. பா. முள்ளியவளை
மூன்றுமுறிப்பு அ த. க. பா. வவுனியா

### திருகோணமலை

அர்ச். மரியாள் கல்லூரி திருகோணமலை
மூதூர் புனித அ. பாடசாலை மூதூர்
மெதடிஸ்த பெ. ஆங்கில பாடசாலை, திருகோணமலை
சிறீ சண்முக வித்தியாலயம் திருமலை
தம்பலகாமம் ம, வித்தியாலயம், தம்பலகாமம்

### கல்முனை

கார்மேல் மகளிர் வித்தியாலயம் கல்முனை
சிறீ கோரக்கர் தமிழ் வி. சம்மாந்துறை
சாய்ந்தமருது மல்ஹறுல்சம்ஸ் வி. கல்மு.
மருதமுனை சம்சுல் இல்ம் வித், கல்முனை
ஆலயடிவேம்பு திருநாவுக்கரசு வித்தி, அக்கரைப்பற்று
பாத்திமாக் கல்லூரி கல்முனை

### மட்டக்களப்பு

வின்சன்ற் மகளிர் கல்லூரி மட்டக்களப்பு
ஏறுவூர் ம, வி, செங்கலடி
குருக்கள்மடம் மெ. மி, க, பா, குருக்கள்ம.
சென் சிசிலியா பெ. பா. மட்டக்களப்பு
கல்முந்தல் அ. த க. பா. கல்லாறு
மெதடிஸ்த மத்திய கல்லூரி மட்டக்.

### காலி

கட்டுக்கொட மு. ம. பாடசாலை
நாலின்ன முஸ்லிம் வித்தியாலயம் காலி
மல்ஹருஸ் சுல்ஹியா பெ, பா. காலி
குறுந்துவத்த மு. வி ஹிந்தோட்டை
மல்ஹருஸ் சுல்ஹியா பெ. பா. காலி
குருந்துவத்த மு. ம. வி. காலி

[தொடர்ச்சி 26ம் பக்கம்]

# தமிழ்த் தின விழா — 1970

*போஷகர்:* திரு. பி. உடகம அவர்கள் [கல்வி மா அதிபதி, நிரந்தரக் காரியதரிசி]

*உதவிப் போஷகர்கள்:* திரு. தணிகாசலம் அவர்கள், (வித்தியாதிபதி, கல்வி அமைச்சு)
திரு. பீ. ஈ. ஜீ. மெண்டிஸ் அவர்கள் (கிழக்குப் பிராந்திய வித்தியாதிபதி)

## விழாக்குழு

*தலைவர்:* திரு. எம். சமீம் (பிரதம கல்வி அதிகாரி)

*உப-தலைவர்:* திரு. ஏ, அருளையா (கல்வி ஆலோசகர், கல்வி அமைச்சு)

## உறுப்பினர்

1. திரு. கு. சோமசுந்தரம், (வட்டாரக்கல்வி அதிகாரி, மட்டக்களப்பு வடக்கு)
2. ,, என். தேவநாயகம்பிள்ளை, (வட்டாரக்கல்வி அதிகாரி, மட்டக்களப்பு தெற்கு)
3. ,, கே. ஏ. பாக்கியன், ( ,, ,, பட்டிருப்பு)
4. ,, ஏ. செபரத்தினம், ( ,, ,, கல்குடா)
5. ,, வி. தம்பிராசா, ( ,, ,, திஜணக்களம்)

## உப குழுக்கள்

### 1. அலுவலகம்

திரு. பி. ரீ. சின்னையா
,, என். இராசதுரை
,, பி. ஜி. காசிநாதர்
,, ஜி. ஜெயச்சந்திரன்
திருமதி எம். ரீ. பல்தசார்
,, டீ. கணபதிப்பிள்ளை

### 2. வரவேற்புக் குழு

திரு. எம். ஐ. எம். மீராலெவ்வை,
,, வி. தம்பிராசா
,, எம். எஸ். எம். ஹுசையின்,
,, ஆர். இராமச்சந்திரன்,
,, எஸ். சீ. கருணானந்தன்
,, ஆர். சதாசிவம்
,, பீ. சின்னத்துரை
திருமதி ஆர். சின்னையா
திரு. எம். சிவநேசராசா
திரு. வி. எஸ். கந்தையா

### 3. அழைப்பிதழ் குழு

திரு. ஏ. செபரெத்தினம்
,, ஆர். இராமச்சந்திரன்
,, பீ. சின்னத்துரை
,, யூ. எல். தாவூத்
,, பி. சிவபாதசுந்தரம்

### 4. விளம்பரம், பரிசு, மலர் ஒழுங்குக்குழு

திரு. என். தேவநாயகம்பிள்ளை
,, பீ. சின்னத்துரை
,, எஸ், வைத்தியநாதன்
,, கே. தியாகராசா
,, எஸ். சிவலிங்கம்
,, எவ். ஆர். ருகல்
ஜனாப். ஏ. எல். எம். மீராசாகிபு

### 5. மண்டப மேடை ஒழுங்குக்குழு

திரு. கே. ஏ. பாக்கியன்
,, ஆர். இராமச்சந்திரன்
,, ஏ. ஏ. சி. லெவ்வை
,, எஸ். பிரான்சிஸ்
,, எஸ். குழந்தைவேல்
,, எஸ். மௌனகுரு
,, எஸ். பாலசிங்கம்
திருமதி ஜி. நாகராசா
,, ரி. இராமச்சந்திரன்
,, எஸ். பாக்கியராசா

### 6. போட்டி நடத்துபவர்கள்

திரு. கு. சோமசுந்தரம்
திரு. கே. ஏ. பாக்கியன்
,, ம. சிவநேசராசா
,, எஸ். குழந்தைவேல்
,, என். இராசதுரை
,, எம். இம்மானுவேல்
,, வி. எஸ். கந்தையா
,, எஸ். மௌனகுரு
திருமதி ஏலாளசிங்கம்
,, ஜீ. நாகராசா
,, ரீ. இராமச்சந்திரன்

### 7. மாணவர் விடுதி மேற்பார்வைக்குழு

**(அ) அர்ச் மிக்கேல் கல்லூரி**

தலைவர்: திரு. கே. எம். ரி. சோமநாதர்
,, எல். எம். ஜோசப்
,, ஏ. சோமநாதர்
,, எம். இம்மானுவேல்
,, சிவப்பிரகாசம்

**(ஆ) மெதடிஸ்த மத்திய கல்லூரி**

தலைவர்: திரு. பி. ஜி. காசிநாதர்
,, ஜே. ஏ. அல்போன்ஸ் மேரி
,, என். இரத்தினசபாபதி
,, எஸ். பாக்கியராசா
,, கே. ஜே. முத்துராஜா

**(இ) வின்சென்ற் மகளிர் கல்லூரி**

தலைவி:— திருமதி ஆர். சின்னையா
செல்வி ஆர். எஸ். கனகரத்தினு
திருமதி வி. அரசரத்தினம்
,, சிவஞானசுந்தரம்
,, ப. சங்கரப்பிள்ளை

**(ஈ) ஒல்ற் நினைவு மண்டபம்**

தலைவி:— திருமதி எஸ் என். தங்கராஜா
,, பி சி. குணரத்தினம்
செல்வி ஆர். கந்தையா
,, கே. அருணசலம்

**(உ) அர்ச். சிசிலியா பெண்கள் பாடசாலை**

தலைவி:— வண. சகோதரி எவறில்டா ஏ. சி.
,, சகோதரி மாறி ஏ. சி
திருமதி ரீ. லோகிதராஜா
,, பீ. இம்மானுவேல்
,, சிவசிதம்பரம்

பொருளாளர், விளம்பர உத்தியோகஸ்தர்: **திரு. ஆர். நாகலிங்கம்**

விழா மலர் ஆசிரியர்: **திரு. பொன். சின்னத்துரை**

# Eastern Province Agricultural Co-operative Union Ltd.

**64, Bar Road, Batticaloa & Karaitivu**

MAIN DEALER FOR MASSEY - FERGUSON
TRACTORS & IMPLEMENTS
SALES O SERVICE O SPARES

Electric & Oxygen Welding Undertaken.

T'phone:—257, Batticaloa
T'gram;—"Service"
T'phone;—10, Nintavur

★

# கிழக்கிலங்கை விவசாய கூட்டுறவுச் சங்கம்

**64, பார் வீதி, மட்டக்களப்பு.**

*பிரதான வியாபாரிகள்;—*

மாசி பெர்குசன், உழவு இயந்திரங்களும்
உபகரணங்களும்
விற்பனை — சேவை — உதிரிப்பாகங்கள்
மின்சார, பிராணவாயு ஒட்டுக்கள் செய்யப்படும்.

*டெலிபோன்* 257, *மட்டக்களப்பு,* 10, *நிந்தவூர்*
*தந்தி:* "*சேர்விஸ்*"

# We have served the public of

# BATTICALOA

*WITH ACCEPTANCE FOR*

# OVER 45 YEARS

## This is a Unique Record

WE SHALL CONTINUE TO GIVE THE SAME SERVICE

**WE SELL**

Ford Tractors & Implements
Genuine Motor Spares
Shell Agricultural Chemicals
Agricultural Sprayers
Duco, Dulux, Paints
Glacio Refrigerators
Yuasa Batteries
Jubilee Radio
Oxygen & Acetylene
Raleigh Bicycles
Humber Bicycles
Water Pumps
Kelani Tyres
Bridgestone, Firestone and other makes of Tyres
Lotus Bicycle Tyres
Crown Brand Aerated Waters

**MAIN DISTRIBUTORS FOR:**

Shell Company of Ceylon Ltd,
Ceylon Oxygen Ltd.
Chemical Industries (Colombo Ltd.)
E. B, Creasy & Company Ltd.
Colombo Ice & Aerated Water Co.

**SUB DEALERS FOR;**

Rowlands Ltd.
Globe Motors Ltd.
British Car Company Ltd,
Tuckers Autodrome
Hunter & Company Ltd,
Sathiywadi Stores & Motor Transporters Ltd.
Ceylon Petroleum Corp,

PETROL SERVICE STATION AT BATTICALOA AND KALMUNAI,
MOTOR AND TRACTOR REPAIR GARAGE AT BATTICALOA
TRACTOR REPAIR GARAGE AT SAINTHAMARUTHU.

# S. A. SELVANAYAGAM & Sons.

**Batticaloa = Kalmunai = Sainthamaruthu.**

*For all your requirements of*

**OILMAN GOODS, STATIONERIES & TOYS**

*VISIT*

# GANESHAN STORES,

13, Central Road, — **BATTICALOA.**

**உங்களுக்குத் தேவையான**

*சகலவிதமான*
*சாய்ப்புச் சாமான்கள், விளையாட்டுப் பொருட்கள், காகிதாதிகள்,*
*மற்றும் நங்கையர் விரும்பும் நவநாகரீக நவீன*
*பொருட்கள் ஆகியவற்றுக்கும்.*
*தையற் பொருட்களுக்கும் சிறந்த ஸ்தாபனம்*

# கணேசன் ஸ்டோர்ஸ்

**13, மத்திய வீதி, — மட்டக்களப்பு.**

## YOU GET A BETTER DEAL
## when you deal with

# *Batticaloa Motor Stores*

FOR ALL YOUR REQUIREMENTS OF
GENUINE MOTOR SPARES AND ACCESSORIES

Always remember when you are in the Eastern Province

## BATTICALOA MOTOR STORES

**Fatima Building**

**No. 58, TRINCO ROAD,**
**BATTICALOA.**

Phone: 402 — Grams: SPARES

## பங்குபற்றும் பாடசாலைகள்.

[20ம் பக்கத் தொடர்ச்சி]

### இரத்தினபுரி

அல்மக்கியா வித்தி. இரத்தினபுரி
றை அ. த. வி. பலாங்கொடை
சீ. சீ. த. க. வி. பலாங்கொடை
கெந்தன்கமுவ மு. வி. எஹலியகொட
அர்ச். அக்னஸ் பெ. வி. பலாங்கொடை

### கண்டி

குருகொட பெ. பா. அக்குரண
சரஸ்வதி ம. வி. புசலாவ
கதிரேசன் க. வி. நாவலப்பிட்டியா
மடவெல மதீனு ம. வி. மடவல பஸார்
உறுகொல அ. த. க. பா.
செயின்ட் சில்வஸ்டர் கல்லூரி
புசலாவ சி. சி. த க. பா.
மொப்ரே பெண்கள் கல்லூரி
பட்டித்தலாவ அ. த. க. பா.
கலஹா அ. த. க. பா.

### நுவரெலியா

யகபத் எடேராகே கன்யராமய, நுவரெலியா
சென் தோமஸ் வி. குருத்தலாவ
சென் யோன் பொஸ்கோ ம. வி. கற்றன்
சென் கபிரியேல் பெ. ம. வி. ஹற்றன்
வெலிமடை பிளவர் கொன்வென்ற், பண்டாரவளை
பூண்டுலோயா த. ம. வி. பூண்டுலோயா
ருகல த. ம. வி. ஹல்கிறன்ஓய
ஹைலண்ட் ம. வி. ஹற்றன்

### பண்டாரவளை

ஸ்பிரிங்வெலி த, ம, வி, பண்டாரவளை
வதுளை பெண் உயர்தர பாடசாலை வதுளை
சரஸ்வதி மகா வித்தியாலயம் வதுளை
தமிழ் பெண்கள் பாடசாலை வதுளை
தமிழ் மகா வித்தியாலயம் ஹுணுகலை
லிற்றில் பிளவர் கொன்வன்ற், பண்டாரவளை
பெண்கள் உயர்தர பாடசாலை வதுளை

For Requirements of Ice Cream etc.

Visit

ICE MILLS,

Trinco Road, BATTICALOA.

**Life Assurance the Solution**

YOUR DOWRY PROBLEMS
EDUCATION OF YOUR CHILDREN
WIDOWS INCOME, YOUR OWN
RETIREMENT AND COMPULSORY
SAVINGS
&
FOR ALL OTHER INSURANCE TOO

**PLEASE CONSULT:**

***Mr. S. Ockersz***

*Organiser Code No.* 398

"CHERYL LODGE"

34, New Dutch Bar Road, Kallady
**BATTICALOA.**

**Insurance Corporation of Ceylon**
**Batticaloa.**



# சிவநடராசா அன்ட் கம்பெனி

## 12, பஜார் வீதி, மட்டக்களப்பு

*புத்தகம், சஞ்சிகைகள் பாவனைப் பொருட்களுக்கு சில்லறை மொத்த விற்பனை ஸ்தாபனம்.*

★ கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன பொருட்களின் மொத்த சில்லறை வினியோகஸ்தர்கள்.

★ லீவர் பிறதர்ஸ் (இலங்கை) லிமிட்டெட்டினரிலுல் மொத்த விற்பனையாளர்களாக நியமனம் பெற்றவர்கள்.

★ இலங்கை போஷாக்கு உணவுப் பொருட்கள் லிமிட்டெட் லூயிஸ் பிரவுண் அன்ட் கம்பெனி லிமிட்டெட் டார்லி பட்லட் அன்ட் கம்பெனி லிமிட்டெட், E.B. கிறீசி அன்ட் கம்பெனி லிமிட்டெட் ஆகிய ஸ்தாபனங்களின் உப - வினியோகஸ்தர்கள்.

★ வீரகேசரி லிமிட்டெட், சுயாதீனப் பத்திரிகை சமாஜம் ஆகியவற்றின் ஏஜெண்டுகள்.



Space donated by

**K. Vetharaniyam & Sons,**

Jewellers,

**BATTICALOA.**

Tel: 401.

*With Compliments of*

# EASTERN DISTRIBUTORS

**BATTICALOA.**

*Distributors of*

**Your favourite Cigarettes**

**Capstan**

**3 Roses**

**4 Aces Etc.**

**AND**

**Your favourite biscuits — MUNCHEE**

Printed by: M. C. H. Ragel, St. Sebastian Press, 65, Lady Manning Drive, Batticaloa, and Published by: Education Department, Batticaloa.